## தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம் - 2019

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மோட்டார் வண்டி ரூபா 2,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவ்வண்டியை கையேற்று கணக்கீடு செய்வதற்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | WP-KS-2087 ஆம் இலக்க மோட்டார் கார் தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்ததுடன் கையளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரச சேவை சேமலாப நிதியத்திற்கு 2006 ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ஊழியர் பங்களிப்பு தொகை பெறுமதி ரூபா 1,501,070 ஆக இருந்த போதும் ரூபா 1,316,338 என ரூபா 184,732 | ஊழியரின் பங்களிப்பு பகுதியை ஊழியர் களிடமிருந்து அறவிடு வதற்கு முகாமைத்துவம் தீர்மானம் எடுக்கும் போது சேவையில் உள்ள | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிறுவகத்தின் காணி அபிவிருத்திக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,120,020 பெறுமதி கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டின் போது சீர் செய்வதற்காக குறித்துக் கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக்கு கிடைத்த நேரடி வைப்புக்கள் ரூபா 471,014 பெறுமதி இனங்காணப்பட்டு கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. இனங்காணப்பட்ட நேரடி அனுப்புகைகளில் ரூபா 191,500 இனங்காணப் பட்டுள்ளதுடன் ஏனையவை இனங்காணப்பட்டு வருகின்றன. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| குறுங்கால தகவல் தொழில்நுட்ப பாடநெறி | 770,005 | 896,005 | 126,000 | அவதானிப்பு சரியயானது. நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் தவறுதலாக அட்டவணை களில் சரியாக பதிவு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| தளபாடங்கள் | 46,046,345 | 46,091,160 | 44,815 | | |
| | **46,816,350** | **46,987,165** | **170,815** | | |

### 1.6 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 11 கணக்கு மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 3,629,081 ஆக இருந்ததுடன் அதில் 1 வருடத்திற்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலமாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 229,531 ஆகவும் 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,934,049 ஆகவும் இருந்தன. | பெற வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு தேவையான தேவையான முயற்சிகளை எடுத்து அதன் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக குறித்துக் கொள்கின்றேன். | பெற வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவக (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 15(4) ஆம் பிரிவு | கல்வி சபைக்கு சம்பளக் கொடுப்பனவின் போது 2015 திசெம்பர் 18 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ சபை கூட்டத்தின் அங்கீகாரத்தின் பேரில் ரூபா ரூபா 5,000 ஆன படியொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அமைச்சரினதும் நிதி அமைச்சரினதும் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கல்வி சபை கூட்டங்களிற்காக செலுத்தப்படும் சம்பளம் தொடர்பாக அடுத்த முகாமைத்துவ சபைக்கு அறிக்கையிட்டு தீர்மான மொன்றை எடுப்பதற்தாக குறித்துக் கொண்டுள்ளேன். | சட்டங்கள், விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 105 | நிறுவக வளவில் இருந்த ரூபா 37,552 பெறுமதியான சந்தன மரத்தின் அடி களவாடப்பட்டு 1 வருடமும் 8 மாதங்களும் கடந்திருந்த போதும் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவக வளவில் இருந்த ரூபா 37,552 பெறுமதியான சந்தன மரத்தின் அடி களவாடலுக்குரிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 6.10 ஆம் பிரிவு | தொடர்புடைய பிரிவுடன் இணங்காத வகையில் 2019 நவம்பர் 30 ஆந் திகதி நடைபெற்ற 128 ஆவது முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் 2019/08/04 ஆம் இலக்க பதவிநிலைப் பத்திரத்தின் பிரகாரம் மரணித்த உதவிப் பணிப்பாளரின் மனைவிக்கு 09 ஆம் இலக்க அரச வீட்டில் ஒரு வருட காலத்திற்கும் அவரால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுகோளின் பேரில் காலத்தை நீடிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தது. | மரணித்த உத்தியோகத்தர் குடியிருந்த உத்தியோகபூர் விடுாதியில் ஓராண்டு காலம் குடியிருப்பதற்கு முகாமைத்துவ சபை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறே ஓராண்டு காலத்திற்கு மேலதிகமாக அவர்களுக்கு வழங்குவது ஒரு முன்மொழிவு மாத்திரமேயாகும். | குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 மார்ச் 05 ஆந் திகதிய DMS/1735 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | (i) தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் வினாத்தாள்களை சரவைபடுத்தலுக்காக 10 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 154,500 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக குறித்துக் கொள்கின்றேன் | அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு படிகளை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 08 உத்தியோகத்தர் களுக்கு பாடநெறி கூட்டிணைப்பு படிகளாக ரூபா 381,562 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | அங்கீகாரத்தை வழங்குமாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கப்பெறும் தீர்மானித்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு படிகளை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (iii) தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் 2001 ஆம் ஆண்டின் முகாமைத்துவ சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 96,750 ஆன மேற்பாவை படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் கிடைக்கப்பெறும் தீர்மானித்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு படிகளை கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,193,164 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,914,386 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 9,107,550 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு செலவினம் அதிகரித்தமை காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிறுவகத்திற்கு சொந்தமான கலையரங்கிலிருந்து மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 6,804,000 ஆக இருந்த போதும் விளம்பரங்களை மேற்கொண்டு கலையரங்கின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக கிடைக்கப் பெற்றிருந்த வருமானம் ரூபா 3,105,207 மாத்திரமாக இருந்தது. | மீளாய்வாண்டின் போது கலையரங்கின் வருமானம் குறைவடைவதற்கு 2019 ஏப்ரல் 21 ஆந் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஒன்றுகூடுவது மட்டுப்படுத்தப்பட்டமையால் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு வெளித்தரப்பினர் நடவடிக்கை எடுக்காமை | விளம்பரத்தை மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | நிறுவகம் அமைந்துள்ள 26 ஏக்கர் அளவிலான காணி எல்லைகள் இடப்பட்டு அரசிடமிருந்து கையளிப்பு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்வதற்கு 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிறுவகம் நடவடிக்கை எடுக்காமையால் காணியில் மேற்கொள்ளப் பட்டிருந்த அத்துமீறிய கையேற்றலை கட்டுப்படுத்தல் சிக்கலான செயற்பாடொன்றாக இருந்தது. | காணியின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்காக உரிய வேண்டுகோளை பாத்ததும்பர பிரதேச செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பிரதேச செயலகத்தினால் மத்திய மாகாண காணி ஆணையாளர் மூலம் காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | காணியின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது இலக்கிடப்பட்டிருந்த E - Kids பாடநெறி நடாத்தப்படாமையால் ரூபா 1,025,875 ஆன வருமானமும் கணனி பாடநெறிகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட பயிலுனர்கள் சமூகமளிக்காமையால் ரூபா 800,250 ஆன வருமானமும் நிறுவகத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | எதிர்பார்த்த மாணவர் அளவு சமூகமளிக்கா மையால் மேற்கொள்ள முடியாமல் இருந்தது | இலக்கினை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 ஆம் ஆண்டின் போது நிறுவகத்தில் பயிற்சி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்திற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைத்த ரூபா 6,000,000 தொகையிலிருந்து ரூபா 844,921 தொகையும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைத்த ரூபா 68,445,000 தொகையில் செலவிடப்படாத ரூபா 24,844,722 தொகையும் 2017 ஆம் ஆண்டின் போது பலநோக்கு கட்டிடத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 305,589 ஆன மீதியொன்றும் வங்கி நடைமுறைக் கணக்கில் விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | பயிற்சி பாடநெறிகளின் தரத்தை மேம்படுத்தும் தொகையில் 10 டிப்ளோமா பாடநெறிகளுக்காக NVQ – Level 4 மற்றும் NVQ – Level 5 பெற்றுக் கொள்வதற்கு ரூபா 1,000,000 செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடத்தை நிர்மாணிப்பதற்கு உரிய இறுதி பட்டியல் கொடுப்பனவு இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. ரூபா 305,589 தொகையில் தற்போது பலநோக்கு கட்டிடம் திருத்தம் செய்யப்படவுள்ளது. | நிதியம் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.4 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2020 மார்ச் 31 ஆந் திகதி வரை நிறுவகத்தின் உயர்மட்ட முகாமையின் 06 பதவிகளில் 11 வெற்றிடங்கள் காணப்பட்டன. நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் (கல்வி மற்றும் அபிவிருத்தி) ஆகிய 2 பதவி வெற்றிடங்கள் 2001 ஆம் ஆண்டு முதல் விடுவிப்பு அடிப்படையிலும் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | உயர் மட்ட முகாமைத்துவத்தின் பதவிகள் உட்பட சகல வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆகக்கூடிய முயற்சியுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 யூன் 19 ஆந் திகதிய முகாமைத்துவ தீரமானங்களின் பிரகாரம் விரிவுரையாளர் ஒருவர் மாதமொன்றுக்கு குறைந்தது 60 மணித்தியாலங்கள் வீதம் 03 விரிவுரையாளர்களால் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 2,040 ஆக இருக்க வேண்டிய போதிலும், ஆண்டினுள் 1,370.25 விரிவுரை மணித்தியாலங்கள் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஆண்டின் 669.75 மணித்தியாலங்கள் குறைவாக விரிவுரை நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பினுள் குறிப்பிடப்பட்டிருந்த 1,184.25 விரிவுரை மணித்தியாலங்கள் என்பது சரியானதல்ல. இதன் பிரகாரம் மூன்று விரிவுரையாளர்களுக்கு கையளிக்கப்பட்ட மணித்தியாலங்களில் மேவுகை செய்யப்படாத மணித்தியாலங்களின் எண்ணிக்கை 975.25 அல்ல. அது 107.75 மணித்தியாலங்களாகும். | முகாமைத்துவ தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒவ்வொரு ஆண்டிற்குமான நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 யூன் 23 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்ட பரிந்துரையுடன் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட தீர்மானிக்கப்பட்டதுடன் மார்ச் 10 ஆந் திகதியின் பின்னர் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் நிலைமையினால் இச்செயற்பாடு தாமதமடைந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | முகாமைத்துவத்தின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல் பிரகாரம் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்வதற்கும் செயன் முன்னேற்றத்தை அளவிடு வதற்காக குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு செயன் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |